REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 12உ திங்கள் (28—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 13உ செவ்வாய் (29—11—55) [இதழ் 142

பெல்லாரி போராட்டம்: 439 பேர் கைது!

பெல்லாரி, நவ. 26—

'பெல்லாரி, ஹொஸ்பெட், சிறுகுப்பா ஆகிய பகுதிகள் கர்நாடக மாநிலத்துடனேயே இருக்கவேண்டும்' என்ற கோரிக்கைக்காக, சட்டவிரோதமாக துங்கபத்திரா மேல் கால்வாய்த் தண்ணீரை மைசூர் கால்வாய்க்குத் திருப்பியதாக 'அகண்ட கர்நாடக நிர்மாண பரிஷத்'தைச் சேர்ந்த சத்தியாக்கிரகிகள் மேலும் 55 பேர் இன்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த 16-ந் தேதியிலிருந்து நடைபெறும் இக்கிளர்ச்சியை யொட்டி இதுவரையிலும் மொத்தம் 439 பேர் கைதாகியுள்ளனர்.

மீண்டும் ஆச்சாரியார் விஷமம்!

பரிபூரண ஒற்றைமுறை ஆட்சி உருவாக்கப்படவேண்டுமாம்!

மாவட்ட தலைமை அதிகாரிகளை எதேச்சாதிகாரிகளாக்க வேண்டுமாம்!

டெல்லி சர்வாதிகாரம் செலுத்த வேண்டுமாம்!

புதுடில்லி, நவ. 27—

"மேலும் பதினைந்து ஆண்டு காலத்திற்கு மாநிலச் சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவராமல் நிறுத்திவைக்கப்படுவது இயலாது என்றால், மத்திய அரசாங்கத்தை ஒற்றை முறை ஆட்சியாக உருவாக்கி, மாவட்ட அதிகாரிகளையும், மாவட்டக் கழகங்களையும் அவ்வாட்சி அமைப்பின் நேரடி அதிகாரத்திற்குள்ளாக்கி, வட்டாரக் கமிஷனர்களைக்கொண்டு இந்தியாவை ஆட்சி புரிவதுதான், அதற்கு மாற்றமாக இருக்கிற ஒரே ஒரு வழியாகும்."

—என்று சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், பத்திரிகை நிருபர்கள் பேட்டி ஒன்றின்போது கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்த கருத்துக்களாவன:—

"பொதுவாக எனக்கு இருந்து வருகிற உறுதிப்பாட்டிற்குப் புறம்பாக, அப்பகுதியின் அரசியல் முக்கியத்துவத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஒரு விரிவான தென்னரசு இருந்தாக வேண்டும் என நான் உணர்கிறேன். தெற்கை தமிழ், மலையாளம், வேறு சில சிறு ஆட்சிகளாகவும் படுத்தி விடுவது ஒவ்வொருவருடையவும் பூரணமான முக்கியத்துவ அழிவில் வந்து முடிந்துவிடும். அடுத்தாற்போல் முழு அளவில் இந்தியாவும் சிறப்பிழந்துவிடும்.

"சென்னையுடன் இணைந்திருக்க வேண்டுமென மலபார் கோரினது ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். புலனுக்கும் அளவிலும், பலம் கொண்டதாகவும் தென்னக ஆட்சி உருவெடுப்பதற்கு, திரு—கொச்சி, மலபார், சென்னை ஆகிய மூன்றும், ஒரு துவக்கத்தைத்தொடங்க வேண்டும். இது பற்றி ஆந்திரமும், கர்நாடகமும் பின்னர் ஆராய்ந்து பார்க்கட்டும். ஒரு தவறு, மேலும் தொடர்ந்தாற்போல பல தவறுகளைச் செய்ய இடமளித்ததாக இருக்கக் கூடாது. ஒரு தவறு ஏற்பட்டுவிடும் பட்சத்தில், அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் சீரிய வழியாகும்.

"சரித்திரபூர்வமாக ஏற்பட்ட நிலைமைகளை அடிப்படையாகக்கொண்டு சீர்தூக்கிப் பாராமல், அலுவலக அறையில் விவாதித்து முடிவு கட்டப்பட்ட எல்லைக்கோடுகளாலும், பிரிவினைகளாலும் தேசிய ஆர்வம் வீணாகச் செலவழியக்கூடாது."

டில்லிக்குக் காவடி?

திருவனந்தபுரம், நவ. 26—

சென்னை-திரு-கொச்சி மாநிலங்களுக்கிடையே தகராறுக்கிடமான பகுதிகள் குறித்து காங்கிரஸ் மேலிடத்துக் குழுவினருடன் விவாதிக்க சென்னை, திரு-கொச்சி மாநிலங்களின் முதலமைச்சர்கள் இருவரும் இந்த வாரத்தில் டில்லி செல்லக்கூடும் என்று தெரிகிறது.

தமிழ்நாட்டின் தலைநகரில் ரஷ்யத் தலைவர்கள்

சென்னை மக்களின் உளங்கனிந்த வரவேற்பு

(நமது தனி நிருபர்)

சென்னை, நவ. 27—

இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்துள்ள சோவியத் தலைவர்கள் புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் திராவிடத்தின் ஒரு பகுதியான கர்நாடகத் தலைநகர் பெங்களூருக்குச் சென்றுவிட்டு, பின்னர், சென்னை மாவட்ட கோவை, நீலகிரி பகுதிகளுக்கு வருகை தந்து, முக்கியப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பின்னர், தமிழ் நாட்டின் தலைநகர் சென்னைக்கு இன்று பகல் 12-15 மணி அளவில் வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று மகிழ்ச்சிப் பெருக்கால் வாழ்த்தொலி முழக்கி, பொதுஉடைமை நாட்டுத் தலைவர்களை குதூகலமாக வரவேற்றனர்.

விமான நிலையத்தில் தரப்பட்ட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, அங்கிருந்து, கிண்டியில் உள்ள 'இராஜ பவனத்'திற்குக் கார் மூலம் சென்றனர்.

விமான நிலையத்தில், ரஷ்யத் தலைவர்களை, சென்னை கவர்னர் பிரகாசா, முதன் மந்திரி காமராசர், மற்றும் பலர் கூடி நின்று மாலையிட்டு வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து 'இராஜ பவனம்' செல்லும் வழிநெடுக சாலையின் இருமருங்கிலும் எண்ணற்ற மக்கள் கூடி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஆங்காங்கே வரவேற்பு வளைவுகளும், கொடிகளும் தோரணங்களும் ஏராளமான அளவில் அமைக்கப்பட்டு, வீதிகள் அழகுறச் செய்யப்பட்டிருந்தன.

போலீசார், மிதமிஞ்சிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

'ராஜபவன'த்திலிருந்து மவுண்ட் ரோடு, ஆரின் ரோடு, பூந்தமல்லி

(4-ம் பக்கம் பார்க்க)

வெகு நன்றாயிருக்கிறது

புதுடில்லி, நவ. 26—

செருப்புக்களையே கண்டிராதவர்கள் 4 பேருக்கு ரூ 11 இலட்சம் பெறுமான செருப்புக்களை இறக்குமதி செய்ய சென்னையில் அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாக இறக்குமதி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தகவலை, குழுக் கூட்டத்தில் வெளியிட்ட கே. ஆர். சந்திரன் என்ற உறுப்பினர், "இறக்குமதி அனுமதி வழங்கப்பட்ட அந்த நால்வரும், இதுவரை செருப்புக்களை இறக்குமதி செய்ததே இல்லை; தங்களுக்குக் கிடைத்த அனுமதியை அவர்கள் உபயோகித்து, மொத்தத் தொகையில் 10 சத விகித மதிப்புடைய 'பூட்பாலிஷ்'தான் இறக்குமதி செய்திருக்கின்றனர்; முதலிலேயே 'பூட்பாலிஷ்' இறக்குமதிக்காக அனுமதி கேட்டிருந்தால் கிடைக்காது என்பதற்காகவே இவ்வாறு செய்திருக்கின்றனர்" என்று தெரிவித்திருக்கிறார்.

புதுவையில் அண்ணாதுரை, நெடுஞ்செழியன்

இலட்சம் மக்களின் உற்சாக வரவேற்பு

மாபெரும் பொதுக்கூட்டத்தில் இலட்சிய முழக்கம்

★

(நமது தனி நிருபர்)

அண்மையில் பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடியினின்றும் விடுதலை பெற்ற புதுவைக்கு அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் நேற்று வருகை தந்தபோது, புதுவை மக்கள் இலட்சத்திற்கு மேலாகத் திரண்டு மிக உற்சாகமானதோர் வரவேற்புத் தந்தனர்.

புதுவை காணாத வகையில் கூடியிருந்த புதுவை மக்கள்—பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக விடுதலைப் போர் நடத்தியபோது காட்டிய அளவு ஆர்வத்தினை, வடநாட்டு ஆதிக்கப் பிடியினின்றும் திராவிடம் விடுதலை பெறுவதற்காக தி. மு. கழகம் நடத்தும் போராட்டங்களுக்கும் தருவோம்—என்று கூறுவதாய் அமைந்திருந்தது, அவர்கள் அளித்த மகத்தான வரவேற்பு!

அண்ணா அவர்கட்கும், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கட்கும், புதுவை வட்ட தி. மு. கழகத்தினர் 27—11—55 அன்று புதுவை நகர் ஒதியஞ்சாலை திடலில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடத்தினர்; அந்தக் கூட்டத்தில்தான் புதுவை மக்கள் இலட்சக்கணக்கில் திரண்டிருந்தனர்.

கூட்டம் சரியாக மாலை 6-30 மணிக்குத் துவங்கிற்று.

கூட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த அரங்கு, ஒரு பெரும் மாநாடு நடத்துவதற்கான அரங்கு போல மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. அரங்கின் உயரே ஏழு கழகக் கொடிகள் வரிசையாக பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன.

அரங்கு முழுவதும் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள், மைதானத்தை ஒளியில் மூழ்கச் செய்திருந்தது.

இரண்டொரு தோழர்கள் கழகப் பண் இசைத்ததும், தோழர் வாணிதாசன் முன்மொழிய, தோழர் இராமச்சந்திரன் வழிமொழிய தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமை ஏற்று உரை நிகழ்த்தினார்.

அவர், தமது உரையில், கூட்டத்தின் நோக்கத்தையும், அண்ணா, நெடுஞ்செழியன் ஆகியோருக்கு புதுவை மக்கள் வரவேற்புத் தர வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கினார்.

பின்னர், புதுவை வட்டார தி. மு. கழகங்கள் சார்பில் அண்ணா அவர்களுக்கும், நெடுஞ்செழியன் அவர்களுக்கும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

அடுத்து புதுவை வட்டக் குழு, புதுவை, முதலியார்பேட்டை, அரிய நகர், பாகூர், முத்தால்பேட்டை, இலாசுப்பேட்டை புதுப்பாளைய ஓர்லியன் பேட்டை, சாலையூர், கோவிந்தசாமி மலை, தேங்காய்த் திட்டு, சேலியமேடு, கல்மண்டபம், கந்தமேடு ஆகிய ஊர் தி. மு. கழகக் கிளைகள், புதுவை திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம், திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் சார்பிலும், கோட்டைக் குப்பம் தி. மு. க. சார்பிலும், ஆமதாபாத் தி. மு. கழகச் சார்பிலும், தனிப்பட்டவர்கள் சிலர் சார்பிலும், கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப் பெற்றன.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு தி. மு. கழக இலட்சியம் குறித்து விளக்கம் தந்தார்.

இறுதியாக அண்ணா அவர்கள், பெரும் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து அரியதோர் சிறப்புரை வழங்கினார்கள்.

இதற்கு முன், பல மன்றங்கள், தனிப்பட்டவர்கள் சார்பில் மாநில மாநாட்டிற்காக நிதி வழங்கப்பட்டது.

கூட்ட இறுதியில் அண்ணா அவர்கள், தோழர் தர்மராசன் அவர்கள் ஆண் மகவுக்கு 'பாண்டியன்' எனப் பெயரிட்டார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூடியிருந்த மக்களில் ஆண்களுக்குச் சமமான அளவு, ஏறத்தாழ தாய்மார்களும் கூடியிருந்து கருத்துரை கேட்டது குறிப்பிடத்தகுந்ததாகும்.

இந்த வரவேற்புக் கூட்டம் எதிர்காலத்தில் புதுவையில் தி. மு. கழகத்திற்கு மகத்தான நேர் இடத்தைப் பெற்றுத் தரும் என்றால் அது மிகையாகாது.

புதுவை வட்டக் குழுவினரை, பொதுச் செயலாளரும், அண்ணாவும் பாராட்டியது, வெறும் சம்பிரதாயத்திற்காகச் செய்த ஒன்றல்ல.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—11—'55 திங்கள்

புதிய தால்மியா வருகிறார்!

சேத் இராமகிருஷ்ண தால்மியா வடநாட்டுத் தொழிலதிபர்களில் ஒருவராவார். அவர் ஏற்கனவே திராவிடத்தில் கால் வைத்துச் சுரண்டிக்கொண்டு இருக்கிறார்.

அந்தத் தால்மியா திராவிடத்தைச் சுரண்டுவதுடன் நின்றுவிடாமல், ஒரு புகைவண்டி நிலையத்திற்குத் தனது பெயரை சூட்டும்படியும் செய்துவிட்டார். திராவிடப் பெருங்குடி மக்களை இழிவும் கேலியும் செய்துவரும் அப்பெயரை மாற்றவேண்டுமென்று நமது கழகம் அமைதியான நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டு, பொருட்சேதமும், உயிர்ச் சேதமும் அடைந்திருக்கிறது. இன்னும் அந்த அவமானம் பெருஞ் சுமையாக இருந்து வருகிறது.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் மட்டுமே வடநாட்டுத் தொழிலதிபரின் பிடி இருப்பது கூடாது; மேலும் புதிதாகத் துவங்கப்படும் தொழில்கள் ஒவ்வொன்றிலுமே வடநாட்டுப் பண முதலைகளின் பிடி இருந்தாகவேண்டும் என்ற தாராள நோக்குடன் 'பச்சைத் தமிழர்' காமராஜரின் அரசாங்கம் நடக்கத் துணிந்து இருக்கிறது. புதிய தால்மியா ஒருவருக்கு தொழில் துறையில் புதிய குத்தகை விடப்படுகிறது.

புதிய தால்மியா வருகிறார். இது கண்டு பழைய தால்மியாவிற்கு மனப் புழுக்கமும், மனமகிழ்ச்சியும் ஒருங்கே ஏற்படும்.

பழைய தால்மியாவின் தொழில் படையெடுப்பு திருச்சிக்கு இப்பக்கத்திலேயே நின்றுவிட்டது. ஆனல், புதிய தால்மியாவின் பொருளாதார ஊடுருவலோ திருநெல்வேலியையும் தாண்டி, கடலையும் தொடுவதாக இருக்கிறது.

தொழில் வளர்ச்சிக்காக மூலதன முதலீட்டு மானியமாக ரூ. 17-இலட்சம் அனுமதிக்கப்பட வேண்டுமென சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் ஒரு கோரிக்கையைக் கொணர்ந்தார். அக்கோரிக்கையின்மீது ஒருவெட்டுப்பிரேரபணையை ஒரு உறுப்பினர் பிரேரபித்தார். அப்பொழுது நடைபெற்ற விவாதத்தின்பொழுதுதான், புதிய தால்மியா ஒருவரை வடநாட்டிலிருந்து திராவிடத்திற்கு இறக்குமதி செய்ய சென்னை அரசியலார் இணங்கி இருப்பதின் உண்மை அம்பலமாயிற்று.

சோடா ஆஷ் தொழிற்சாலை ஒன்று சென்னை மாகாணத்தில் துவங்குவதற்கு சென்னை தொழில் நிறுவனம் ஒன்றும், வடநாட்டுத் தொழில் நிறுவனம் ஒன்றும் அனுமதி கோரினதாகவும், அனுமதி வடநாட்டுத் தொழில் நிறுவனத்திற்கே கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது; சென்னை நிறுவனத்திற்குச் சலுகை காட்டாதது முறையாகுமா என சுயேச்சை அபேட்சகரான வி. பாலகிருஷ்ணன் நிதி அமைச்சரைக் கேட்டார்.

அக்கேள்விக்கு நிதி அமைச்சர் கூறிய பதில் விசித்திரமானதாகவே இருக்கிறது. அதாவது, சென்னை நிறுவனத்திடம் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் கிடையாது; வடநாட்டுத் தொழில் நிறுவனத்திடம்தான் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்; எனவேதான் தொழிற்சாலை நிறுவ சென்னை நிறுவனத்திற்குக் கொடுத்திருந்த அனுமதியை முடிவாகத் துண்டித்துவிட்டு, வடநாட்டு நிறுவனத்திற்குச் சலுகை காட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அதுவுமன்றி சோடா ஆஷ் தொழிலில் 5,000 நபர்களும் அதற்குத் தொடர்புடைய மற்றத் தொழில்களில் 5,000 நபர்களும் புதிய தொழிற்சாலையில் பணி பெறுவர் என்று நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சோடா ஆஷ் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பெரும் மூலதனம் சென்னை நிறுவனத்திடம் இல்லை; அப்பலம் வடநாட்டு நிறுவனத்திற்குத்தான் இருக்கிறது; எனவேதான் சென்னை நிறுவனத்திற்குத் தரப்பட்டிருந்த அனுமதியைக் கத்தரித்துவிட்டு வடநாட்டு நிறுவனத்திற்கு அனுமதி தரப்பட்டது என அமைச்சர் கூறி இருப்பாரானல், அவ்வாதம் ஏறத்தாழ பொருந்தக் கூடியதாக இருந்திருக்கும். ஆனல் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் சென்னை நிறுவனத்திடம் இல்லை—அதனல்தான் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த அனுமதி வாபஸ் பெறப்பட்டுவிட்டது என அமைச்சர் கூறுவது, வெறும் பசப்பேயாகும்.

அதிகமான ஊதியம் கொடுத்தால் எந்தத் தொழிலுக்கும் தேவைப்படும் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களை எவராலும் பெறுவது சாத்தியமாகும். எனவே, சென்னை நிறுவனத்திற்குக் கொடுத்திருந்த அனுமதி திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கு, தொழில் தெரிந்தவர்கள் இல்லை என பழிபோட்டுப் பேசும் அமைச்சர் கூற்றில் ஒரு துளியும் உண்மை இருப்பதாக நம்புவதற்கில்லை.

சோடா ஆஷ் தொழிற்சாலையை நிறுவுவதில் சென்னை நிறுவனம் புறக்கணிக்கப்பட்டதற்கும், வடநாட்டு நிறுவனம் ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் அமைச்சர் கூறுவதுபோன்று தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் இருப்பதும் இல்லாததும் தானு காரணம் என்று ஆராய வேண்டும். அத்தகு ஆராய்ச்சியில் தலையிட வேண்டிய கஷ்டத்தை நிதி அமைச்சர் எவருக்குமே கொடுக்கவில்லை. அவரே, உண்மையான காரணத்தையும் கக்கிவிட்டார்.

அதாவது, சோடா ஆஷ் தொழிற்சாலை துவங்குவதற்கான அனுமதியை வடநாட்டு நிறுவனம் ஒன்றுக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, சென்னையிலுள்ள மேட்டூர் கெமிகல்ஸ் போன்ற தொழில் நிறுவனங்களைக் கலந்து கொண்டு சென்னை அரசாங்கம் முடிவிற்கு வந்ததா என்று பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த இராமமூர்த்தி அவர்கள் கேட்டார். அதற்குப் பதில் கூறிய அமைச்சர், 'தொழிற்சாலையைத் துவங்குவதற்கான அனுமதி தரும் உரிமை சிறப்பாக மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும்; இருந்தாலும் அனுமதி தரப்படுவதற்கு முன்னதாக சென்னை தொழில் நிறுவனங்களைக் கலந்தாலோசித்தோம்; ஆனல், ஒரு நிறுவனமும் புதிய தொழிற்சாலையைத் துவங்க முன்வரவில்லை' என்ற உண்மையைக் கக்கிவிட்டார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கு, எம்மாதிரி தொழிற்சாலை துவங்கப்படுவதானலும் அனுமதி தரவேண்டிய உரிமை டெல்லி ஆதிபத்தியமான இந்தியப் பேரரசிற்கே சட்டப்படி உண்டு. இக்குறிப்பிட்ட விஷயத்தில் சென்னை அரசாங்கத்திற்கு உள்ள உரிமை எல்லாம் வெறும் ஆலோசனை கூறும் அளவோடு இருப்பதுதான்.

சோடா ஆஷ் தொழிற்சாலை துவங்கப்படுவதில், சென்னை நிறுவனத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அதற்குப் பதிலாக வடநாட்டு தால்மியாவிற்கு அனுமதி தரப்பட்டதற்கும் உள்ள உண்மையான காரணத்தை இப்பொழுது வாசகர்கள்புரிந்துகொண்டிருக்கலாம்.

திருநெல்வேலியில் தொழிற்சாலை துவங்குவதற்கு, சென்னை நிறுவனமும் வடநாட்டு நிறுவனமும் மனுப் போட்டு, வடநாட்டு நிறுவனம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது என்ற அளவில், இந்த விவகாரம் இருக்கவில்லை. தொழிற்சாலையைத் துவங்குவதில் முதல் முதலாக சென்னை நிறுவனத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டு, சிறிது காலம் கழிந்த பின்னரே கொடுத்த அனுமதி திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டு, வடநாட்டு நிறுவனத்திற்குச் சலுகைக் காட்டப்பட்டிருக்கிறது. முதலில் சென்னை நிறுவனத்திற்கு தரப்பட்டுவிட்டது. பின்னர், எக்காரணத்தாலோ அவ்வனுமதி திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டு, வடநாட்டு நிறுவனத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் சென்னை நிறுவனத்திடம் இல்லாமையும், தால்மியா நிறுவனத்திடம் இருப்பதுமே அந்தக் காரணம் என நிதி அமைச்சர் கூறுகிறார்.

ஆனல், அனுமதி தரும் உரிமை பெற்றுள்ளதும், அனுமதி கொடுத்துள்ளதுமான டெல்லி ஆதிபத்தியம், என்ன காரணம் காட்ட இருக்கிறதோ, யார் அறிவார்கள்!

காரணம் எதுவானலும் புதிய தால்மியா சென்னை மீது படையெடுத்துவிட்டார் என்பது மட்டும் நிச்சயமாகும்!

தொடக்கப் பள்ளிகள்

ஆதாரப் பள்ளிகளாக மாற்ற சென்னை சர்க்கார் முயற்சி?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சாத்தியமான அளவுக்கு அதிக தொடக்கப் பள்ளிகளை, ஆதாரப் பள்ளிகளாக மாற்ற சர்க்கார் உத்தேசித்திருப்பதாக நிதி மந்திரி சுப்பிரமணியம் சென்னை மேல் சபையில் தெரிவித்துள்ளார்.

‘இன உணர்வை இழந்ததாலேயே இன்னல்கள் பல இழைக்கப்படுகிறது’

‘புனரமைப்புக் குழு சிபாரிசுகளால் தென்னாட்டுக்கு விபரீத விளைவுகள் ஏற்பட்டுள்ளது’

சென்னை சட்ட சபையில் ஏ. கோவிந்தசாமி முழக்கம்

“தமிழகத்திற்குச் சேரவேண்டிய பகுதிகளைக் கேரளத்துடன் இணைத்துவிட்டு, அதற்குக் காரணம் கூறுகிறபோது, ‘அந்தப் பகுதியிலுள்ள தமிழர்கள் வந்துபோய்க் கொண்டிருக்கும் கூலிகள்’ என்று ஏளனமாக மாநிலக் குழு கூறியிருக்கிறது என்றல், இதைவிட வெட்கப்பட வேண்டிய நிலை வேறென்றுமில்லை.

“மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்படவேண்டுமென்று கூறுகிறபோது, அதை வேண்டாமென்று எதிர்க்கக்கூடியவர்கள்கூடத் தமிழர்களிடையே இருப்பதினல்தான், தமிழ்ப் பகுதிகளில் வாழ்கிற மக்களை, ‘அன்றடம வந்து செல்லும் தோட்டக் கூலிகள்’ என்று பிறரால் கருதப்படும் நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

“தமிழர்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியும், மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் அதிகப்படாததின் காரணம்தான், இன்றையத் தினம் தமிழ் நாட்டைச் சேர்ந்த அரிகௌடர் அவர்கள், நீலகிரி கன்னடத்துடன் சேரவேண்டுமென்றும், ‘சென்னை தனி மாநிலமாக இருக்கவேண்டும்’ என்று மேல் சபையில் கோவிந்தமேனனும், ஆந்திராவைச் சேர்ந்த தென்னேட்டி விசுவநாதமும் கூறுகிறார்கள். சென்னைப் பிரச்சினை முடிந்துபோன ஒன்று; அது தமிழ் நாட்டுடன்தான் இருக்க வேண்டும். எனவே, நம்மிடையே ஒற்றுமை இல்லாததின் காரணத்தால்தான் திருத்தணியையும்கூட ஆந்திராவிடம் சேர்ப்பதற்கு விட்டுவிட்டு நிற்கிறோம்.

“ஆந்திர சர்க்காரால் சித்தூர் பகுதித் தமிழர்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றனர்; மலையாளிகளால் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரையில் வாழும் தமிழர்கள் நசுக்கப்படுகிறார்கள் என்பதால்தான் இன்றைக்கு திரு. பி. டி. இராசன் போன்றவர்களிடம்கூட ‘விழிப்பு’ ஏற்பட்டிருக்கிறது.

“இந்த நேரத்தில், அமைச்சர் சுப்பிரமணியம், ‘ஒருநாளும் பீர்மேடு, தேவிகுளம் ஆகியவற்றைக் கேரளத்திற்குக் கொடுக்க மாட்டோம்’ என்று சொல்ல முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆகவேதான், அவரது கூற்றை வரவேற்கிறோம்—அவரைப் பாராட்டுகிறோம்; ஆனல், அதே நேரத்தில் அவருடைய பேச்சில் காணப்பட்ட சில பகுதிகள் வரவேற்கக்கூடியனவாக இல்லை—அதாவது, ‘தமிழகம் ஏற்பட்டாலும் நாம் ஒற்றுமையுடன் வாழ இந்திய யூனியனுடன் இணைந்திருக்க வேண்டும்—நாட்டு ஒற்றுமை முக்கியம்; மொழிவழி மாநிலம் என்றல் தவருக எண்ணிவிடக்கூடாது; நிர்வாக நலனுக்காகவே இவை பிரிக்கப்படுகின்றன’ என்று அவர் சொல்வதையெல்லாம் என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை.

“வட நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தென்னகம், தனித் திராவிடமாக விளங்க வேண்டுமென்பதே எங்கள் கருத்து; மக்கள் உணர்ச்சி—மக்கள் எழுச்சி பொங்கி எழும்போது நிதி அமைச்சர் போன்றவர்கள் அதை முழு மனதுடன் வரவேற்கத்தான் செய்வார்கள்: அந்த நிலைமை விரைவிலேயே வரப் போகிறது என்று எதிர்பார்க்கிறேன்,”

—என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, அவர்கள் சென்னை சட்ட சபையில் 23—11—55-ல், மாநிலப் புனரமைப்புக் குழு சிபாரிசுகள்குறித்த விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். (அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது)

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“மொழி அடிப்படையில் மாநிலங்களை அமைப்பதே தவறு என்று சிலர் கருத்து தெரிவித்திருக்கின்றனர்; ஆனல், காங்கிரஸ் சுதந்திரத்திற்காகப் போராடிய காலத்திலேயே, ‘நாட்டு ஒற்றுமை, மொழி அடிப்படையில்தான் ஏற்பட முடியும்,’ என்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையிலும் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டிகளை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி என்று அமைத்துக்கொண்டது. அப்படி இருக்கும்போது, சுதந்திரம் அடைந்த பிறகு அதே அடிப்படைக் கொள்கையைக் கொண்டு மொழிவழி மாநிலங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென மக்கள் விரும்பாமல் இருப்பதற்கில்லை. மொழிவழியில் மாநிலங்களைப் பிரித்திருந்தால், நாட்டின் எந்தப் பகுதியிலும் கொந்தளிப்பு ஏற்படுவதற்கு இடமிருந்திருக்காது. ஏதோ, மாநிலங்களை மொழிவழியில் பிரிக்கப்பட்டால் போதும் என்று எண்ணுவது தவறு; மாநிலங்களைப் பிரிக்கும் போது, அந்தந்த மாநிலங்களின் பொருளாதாரத்தையும், நிர்வாக நலத்தையும் கவனிக்க வேண்டுமென்று சாக்குப்போக்குச் சொல்லுகிறவர்கள் இதனை சிந்திக்க வேண்டுமென்ற உணர்வு அதிகப்பட்டு வருகிறது; மொழிவழி அடிப்படையில மாநிலங்கள் பிரிக்கப்பட்டால் சுதந்திர உணர்ச்சி பெருகுவதுடன் அவர்களது பண்பாட்டை வளர்த்துக்கொள்ளும் மனப்பான்மையும் அதிகமாகும்; அறிவாற்றலால் தங்கள் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற உணர்ச்சி அதிகமாகும்—இதுதான் தேசீய உணர்வாகும்; ஆனல், புனரமைப்புக் குழுவினர் தங்கள் அறிக்கையின் மூலம், இவைகளுக்கெல்லாம் சாவுமணி அடித்திருக்கிறார்கள்.

“தென்னகத்தில் ஒரு இந்தி பல்கலைக் கழகம் இருக்க வேண்டுமென்று, குழு, சிபாரிசு செய்திருக்கிறது. திராவிட நாட்டில் இந்தி பல்கலைக் கழகம் இருக்க வேண்டிய அவசியமே இல்லை.

“வடநாட்டுப் பல்கலைக் கழகத்தில் தென்னாட்டு மொழி ஒன்றை கற்றுக்கொடுக்க வேண்டுமென்று கூறுவதெல்லாம் வெறும் கண் துடைப்பு வேலைதான்.

“அறிக்கையின் விளைவாக, இன்றைக்கு நாடு தேடிக்கொள்ளும் உணர்ச்சி அதிகப்பட்டு, சண்டையும், சச்சரவும் ஏற்பட்டுவருவதைப் பார்க்கிறோம்; பம்பாயில்

(3 ம் பக்கம் பார்க்க)

பம்பாய்—மாதுங்கா தி.மு. க. செயற்குழுக் கூட்டம்

14—11—55 பிற்பகல் 3-மணிக்கு, டி 15-18 எ. எண். 161-இல்லத்தில் தோழர் அன்புச்செழியன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. தோழர்கள் ஜோதிநாயகம், நாதன், பிச்சையா, வரதராசன், நடராசன், பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், கிளைக் கழக 2-வது ஆண்டு விழாவை, டிசம்பர் முதல் வாரத்தில் கொண்டாடுவது எனவும், மற்றும் பல முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், தோழர் இருதயராஜ் அவர்கள் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்—அந்தேரி தி. மு. கழகம்

15—11—55 மாலை 3 மணியளவில், தோல்டுங்கரி பணிமனையில் தோழர் எஸ். முத்து தலைமையில் கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எல். எம். பாண்டியன் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

ஆமதாபாத் நகர தி. மு. கழகம்

16—11—55 காலை 10 மணியளவில். ஆமதாபாத் தி மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நகரச் செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டதுடன், இப்பகுதியில், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் அச்சிட்டு கழகக் கொள்கைகளைப் பரப்புவதென்றும், ஆமதாபாத் தி. மு. கழக ஆண்டுவிழாவை, தைத் திங்களில் நடத்துவதென்றும், கழகப் பிரச்சாரத்திற்காக, முத்தமிழ் நாடக மன்றத்தை கழகத்தின் நேரடி மேற்பார்வையில் இயங்கச் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னிமலை தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

14—11—55 மாலை 6½ மணியளவில் குமரன் திடலில் தோழர் எஸ். அப்பாவு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஈ. வெ கி. சம்பத், கோவை-செழியன் ஆகியோர் நமது கொள்கைகள் பற்றி சொற்பெருக்காற்றினர்.

கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்களுக்கு கழகச் சார்பிலும், மறுமலர்ச்சி நாடக மன்றச் சார்பிலும் கைத்தறித் துணிகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு கழகச் சார்பில் வரவேற்பு, வாழ்த்து இதழ் வாசித்து அளிக்கப்பட்டதுடன், சுற்றுவட்டாரத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிக்கப்பட்டன.

இறுதியில் பொதுச் செயலாளர் அவர்கள் நாட்டுப் பிரிவினையும், அரசியல், சமுதாயம் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

துறையூர் தி. மு. கழகம்

15—11—55 இரவு 9 மணிக்கு கிளைக் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 16—10—55ல் நடைபெற்ற கிளைக் கழக 7-வது ஆண்டுவிழாக் கூட்ட வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டதுடன், பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் இருதயராஜ் அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

கழகச் செய்திகள்

சென்னை 35-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

9—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை கோடம்பாக்கம் சிங்காரவேலு திடலில், சென்னை 35-வது வட்டக் கிளைக் கழகச் சார்பில், தோழர் கோ. இறையரசு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சா. வில்லவன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசிய பின், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இன்றைய அரசியல் நிலை குறித்தும், திராவிட நாடு, திராவிடருக்காகவேண்டிய காரண காரியங்களைக் குறித்தும், பகுத்தறிவிற்கு ஒத்துவராத தீபாவளிப் பண்டிகையைத் தமிழர்கள் ஒதுக்கித் தள்ளவேண்டியதையும் விளக்கிப் பேசினார்.

வ. உ. சி. மன்றச் சார்பாகப் பொதுச்செயலாளர் அவர்களுக்குக் கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது.

கோடம்பாக்கம் ஸ்டுடியோ தொழிலாளத் தோழர்களின் சார்பாக மாநில மாநாட்டு நிதியாக ரூ 51 பொதுச் செயலாளர் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

கூட்ட இறுதியில், பேராசிரியர் இருதயராஜ் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகம்

23—11—55 இரவு நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 23—10—55-ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு செலவுகள் கிளைக் கழக வரவு செலவுகள் ஆகியவை சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தோழர் க. பார்த்தசாரதி தந்தையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

19—11—55 இரவு 9½ மணியளவில் சென்னை 44-வது வட்ட (மைலாப்பூர்) தி. மு. கழகக் கிளை பணி மனையில், தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழு கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், 9—9—55ல் நடைபெற்ற கிளைக் கழக 6-வது ஆண்டு விழா, 8—10—55ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு-செலவுகள் பரிசீலிக்கப்பட்டு, இருப்புத் தொகை ஒப்புக்கொள்ளப்பட்டும் 10—12—55க்குள் கழகப் பணிமனையை வேறுஇடத்திற்கு மாற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டதுடன், தோழர்கள் ஆர். அறிவழகன், ஏ. இராதாகிருட்டிணன் ஆகியோர் முறையே துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டது.

சென்னை—47-வது வட்ட தி. மு. க. கிளை துவக்கம்

20—11—55 மாலை 6½ மணிக்கு சென்னை சைதை ஜோன்ஸ் ரோடு எண் 155 இல்லத்தில், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமையில் 47-வது வட்ட தி. மு க. கிளை துவக்கப்பட்டது. தோழர் திருநாவுக்கரசு அவர்களை செயலாளராகக் கொண்டு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர் தமது உரையில், கழக வளர்ச்சி குறித்தும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை கடைப்பிடிக்க வேண்டிய நிலை குறித்தும், உறுப்பினர்கள் கழக வளர்ச்சிக்குப் பணியாற்றும் முறை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

நரசிங்கபுரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

30—10—55 மாலை 7 மணி அளவில், மாரியம்மன் திடலில் தோழர் என். கெ. இராசு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எம். பி. சுப்ரமணியம் எம். எல். ஏ, முசவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வால்பாறை வட்டார தி. மு. கழகம்

13—11—55-ல், வால்பாறை வட்டார தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெற்ற வட்டாரத் தி. மு கழகச் செயற் குழுக் கூட்டத்தில், வட்டாரத் துணைச் செயலாளராகத் தோழர் முத்தசாமியும், பொருளாளராகத் தோழர் மாரியப்பனும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பேராசிரியர் இருதயராஜ் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* * *

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6 மணிக்கு, மாணிக்கா எஸ்டேட்டில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆ. க. வேலவன், அருணாசலம், தங்கமுத்து ஆகியோர் பேசினர்.

கீழதிருப்பாலக்குடியில் தி. மு. க. துவக்க விழா

13—11—55 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக் கூட்டம் தோழர் என். அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. சிவஞானம், ப. நாராயணசாமி ஆகியோர் பேசியபின், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல், சமுதாய அமைப்பு, தி. மு. கழக இலட்சியம் ஆகியவை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

மேட்டூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

13—11—55 மாலை 6 மணிக்கு, மேட்டூர் பொதுஜன சேவா சங்க மைதானத்தில் தோழர் எம். என். வெங்கிடாசலம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஜெயராமன், அ. பாலு, க. கு. சின்னசாமி, கோவை-செழியன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் தோழர் இருதயராஜ் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குடந்தை நகர தி. மு. க.

13—11—55ல், குடந்தை அண்ணா அரண்மனையில் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், போராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், 18—12—55ல் குடந்தையில் நடைபெற இருக்கும் பொதுக்குழுக் கூட்டத்தையும், மாலை நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தையும் சிறப்பாக நடத்துவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இருகூர் தி. மு. கழகம்

பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில், இருகூர் தி. மு. கழக உறுப்பினர்கள் அனைவரும் கழகக் கட்டிடத்தில், 15—11—55 மாலை 7-30 மணிக்குக் கூடி, 2 நிமிட நேரம் மவுனம் மேற்கொண்டனர். அவரது மறைவு குறித்து கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பண்ணைக்காடு தி. மு. கழகம்

16-11-55ல், கிளைக்கழகப் பணிமனையில் தோழர் என். எஸ். ஏ. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற செயற் குழுவில் தோழர் சேது கோதண்டராமனை செயலாளராகக் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை நகர தி. மு. கழகம்

17—11—55 இரவு 10 மணிக்கு நகர செயலாளர் தோழர் அ. சுப்பிரமணியம் தலைமையில், நடைபெற்ற நகரக் கிளை செயற்குழுக் கூட்டத்தில், வேலாயுதபுரத்திலும். வெள்ளைக்கோட்டையிலுமாக இரண்டு உட்கிளைகளை அமைத்து, அவைகளை நகரக் கிளையோடு இணைத்துக் கொள்வது என்றும், அருப்புக்கோட்டைக்கு அண்ணா அவர்கள் வருகை தரும்போது, கழகச் சார்பில் வரவேற்பும், ஊர்வலம் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், கழகத்திற்கு நன்கொடைகள் மூலம் நிதி திரட்டுவதெனவும், மற்றும் ஒரு முக்கியத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சேலூர் (வ. ஆ. மாவட்டம்) தி. மு. கழகம்

17—11—55 இரவு 8 மணிக்கு கழக நிலயத்தில், தோழர் வி. இ செயராமன் தலைமையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில் 1—5—55 முதல் 16—10—55 வரையுள்ள கழக வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், நிலம் பயிர் செய்த வரவு செலவுக் கணக்குகளும், 25—6—55ல் நடைபெற்ற கழக 5-வது ஆண்டு நிறைவு விழா வரவு-செலவுகளும் சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர், செயற்குழு உறுப்பினர்கள் மாதக் கட்டணம் நான்கணா செலுத்துவதென்று முடிவு செய்யப்பட்ட பின்னர், இராட்ணமங்கலம் தி. மு. கழகத் தோழர் கேமிநாதன் அவர்கள் தாயார் சிந்தாமணி அம்மையார், பேராசிரியர் ஏ. இருதயராஜ் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கண்டமனூரில் தி. மு. க. துவக்க விழா

19—11—55 அன்று கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் சி பி. சிற்றரசு தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாலை 6 மணியளவில் கோட்டை மைதானத்தில் தோழர் வை. ஞானம் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அருப்புக்கோட்டையில் தி. மு. க. (கிளை) திறப்பு

20—11—55 மாலை 6½ மணியளவுக்கு, அருப்புக்கோட்டை வேலாயுதபுரம் பிள்ளையார்கோவில் தெருவில், மதுரைத் தோழர் கே எஸ். சந்தானம் அவர்கள் நகர தி.மு. கழக உட்கிளையைத் திறந்து வைத்தார். தோழர் சு. நடராசன் கழகக் கொடியேற்றி வைத்தார்.

இரவு 7 மணியளவில் தோழர் சிவ சண்முகசுந்தரனார் தலைமையில் மேற்படி கிளையின் முன்பு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சந்தானம், எம் எஸ். இராமசாமி மற்றும் பலரும் கழகக் கொள்கைகள் பற்றியும், திராவிடம் பிரியவேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

மாயூரம் நகர தி. மு. கழகம்

20—11—55 காலை, ஆசிரியர் வேலாயுத மன்றக் கட்டிடத்தில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற நகரக் கிளைச் செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் வரவேற்புப் பொதுக் கூட்ட வரவு-செலவுகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், நகர கழகத்திற்குச் சொந்த இடம் வாங்க விரைவில் நிதி நாடகம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கோவிந்தசாமி பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டதைப்போன்று, கேரளத்திலும், கன்னடத்திலும், தமிழகத்திலும் ஏற்படுமோ என்ற சூழ்நிலை அதிகப்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம்; சையத் பாசில் அலி குழு, மொழி அடிப்படையில் மாநிலங்களை அமைப்பது என்று முடிவு செய்திருந்தால் யாருடைய உரிமைகளையும் பறிக்காமல் இருந்திருக்க முடியும்.

"இன்றையத் தினம் தமிழர்களுடைய உரிமை பறிபோகிறது. திரு-கொச்சி எல்லை ஓரத்திலுள்ள பீர்மேடு, தேவிகுளம், செய்யாற்றங்கரை ஆகிய இடங்களில் தமிழர்கள்தான் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டோடு எங்கள் பகுதி சேர்க்கப்பட வேண்டுமென்ற ஒரே கொள்கையை வைத்தே அவர்கள் தேர்தலை நடத்தி எல்லா இடங்களிலும் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். சட்டசபைக்குள்ளும், திரு-கொச்சி தமிழ்ப் பிரதேசக் காங்கிரஸ் கட்சி என்ற பெயரில் இயங்கி வருகிறார்கள்; என்றாலும், அப்பகுதிகள் முழுவதையும் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டியிருக்க, அவற்றை கேரளத்துடன் இணைப்பதின் மூலம் சையத் பாசில் அலி குழு தமிழர்களுக்குப் பெரும் அநீதி இழைத்திருக்கிறது. பசில் அலி குழுவில், தமிழகத்தைச் சேர்ந்தவர்களை உறுப்பினராக்காத காரணத்தால் இந்த அநீதி நடந்துவிட்டது. எல்லா மொழிக்காரர்களும் இக்குழுவில் இடம் பெற்றிருந்தால் குழப்பம் வந்திருக்க இடமில்லை."

நன்கொடை

20—11—55 மாலை 6½ மணிக்கு சேலம் வி. மார்க்கெட்டில் நடைபெற்ற தி. மு கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால், தோழர் அண்ணாமலை அவர்களது ஆண் மகவுக்கு 'மதியழகன்' என்றும், தோழர் கிருஷ்ணன் அவர்களது ஆண் மகவுக்கு 'அன்பழகன்' என்றும், தோழர் கே. கோபால் அவர்களது பெண் மகவுக்கு 'செந்தாமரை' என்றும், தோழர் ஆண்டியப்பன் அவர்களது ஆண் மகவுக்கு 'பாண்டியன்' என்றும் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கென நன்கொடையாகத் தரப்பட்ட தொகை முறையே ரூ 1, 1, 1, 2 (மொத்தம் ரூ. 5-ம்) வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கடலாடியில் (வ. ஆ. மா.) தி. மு. கழகத் திறப்பு

21—11—55 காலை, வடார்க்காடு மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி தலைமையில், தோழர் மு. கருணாநிதி கடலாடி தி மு. கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் கருத்தோவியன், போளூர்-சுப்பிரமணியம் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். மாநில மாநாட்டு நிதிக்காக 101 அணுக்கள் அளிக்கப்பட்டது.

குடந்தை தி. மு. கழகம்

21—11—55 பிற்பகல் 2 மணியளவுக்கு மஞ்சூரில் தோழர் கே. ராமன் தலைமையில் குடந்தை நகர தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், நா. பேப்பன் ஆண்டு அறிக்கை வாசித்தார். பின்னர், தோழர்கள் ஏ வி. பி. ஆசைத்தம்பி, சண்முகநாதன், குடந்தை மாதன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

அமைதியின்மை நீடிக்கிறது!

பம்பாயில் மீண்டும் குழப்பம்

போலீசார் தடியடி: கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

பம்பாய், நவ. 27—

இங்கு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தைக் கலைத்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் சில ஆர்ப்பாட்டக்காரர்கள் குழப்பம் செய்ததையொட்டி, போலீசார் கண்ணீர்ப்புகை, 'இலேசான' தடியடிப் பிரயோகங்களை மேற்கொண்டிருக்கின்றனர்.

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கைகள் குறித்து பம்பாய் பிரதேச காங்கிரஸ் செயற்குழுவின் முடிவுகளை ஆதரித்து பிரதேசக் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற அக்கூட்டத்திலேயே மேற்படி நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

வீடு திரும்பிச் சென்றுகொண்டிருந்த மக்கள் மீது பழஞ்செருப்புக்களையும், கற்களையும் வீசினர் என்ற காரணத்திற்காக, சில ஆர்ப்பாட்டக்காரர் மீது போலீசார் 'இலேசான' தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கின்றனர்.

கல்வீச்சுகளினால் 15 பேர் காயம் பட்டனர் என்றும், 3 போலீஸ்காரர்களும் காயமுற்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

கூட்டத்தில், பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் குழுத் தலைவர் எஸ். கே. பட்டீல் மாநில புனரமைப்புக் குழுவினரின் அறிக்கைகள் குறித்தும், பம்பாய் மாநிலத்தை குஜராத், மகாராஷ்டிரம், பம்பாய் நகரம் ஆகிய மூன்று 'யூனிட்'டுகளாகப் பிரிக்க வேண்டுமென்ற காங்கிரஸ் குழுவின் கருத்துப்பற்றியும் பேசியிருக்கிறார்.

அவர் பேசுகையில், 'மகாராஷ்டிரர்களுக்குப் போதுமான அளவிற்கு மாநிலக் குழுவினர் நியாயம் வழங்கியுள்ளனர்; 2 கோடி மக்கள் தொகை கொண்ட மத்தியப் பிரதேசத்தில், மகாராஷ்டிரர்கள் 70 இலட்சம் பேராக இருந்தபோதிலும்கூட, 'விதர்ப்ப மாநிலம் என்ற தனி மாநிலம் தங்களுக்குத் தேவை' என்று அவர்கள் கூறினர். ஐதராபாத்திலும்கூட மகாராஷ்டிரர்கள் சிறுபான்மையினர்தான். மாநிலப் புனரமைப்புக் குழுவினரின் சிபாரிசுப்படி அமையப்படும் இருமொழி மாநிலமான பம்பாய் அமைச்சரவையில் 50 சதவிகித இடம் மகாராஷ்டிரர்களுக்கு ஒதுக்கப்படும். அந்த அமைச்சரவையின் தலைவராக விருக்கும் முதலமைச்சரும், நிதி அமைச்சரும்கூட மகாராஷ்டிரர்களாகவே இருப்பர். இந்தக் காரணங்களை முன்னிறுத்திப் பார்த்தால், மாநில புனரமைப்புக் குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்ட பம்பாம் இரு மொழி மாநில அமைப்பு மகாராஷ்டிரர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று கூறிவிட முடியாது, என்று கூறியிருக்கிறார்.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அதனைக் கலைக்க முயன்ற சம்யுக்த மகாராஷ்டிர கோரிக்கையாளர்களில் 30 பேரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

சௌபாத்தி முக்கியப் போக்குவரத்துப் பாதையில் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் பஸ் ஒன்றை கல்லெறிந்து தாக்கிய கலகக்காரர்களைக் கலைப்பதற்கு போலீசார் மும்முறை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை

பவானிசாகரில் நிறுவப்படும்?

சென்னை மாநிலத்தில் நிறுவப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலையை மேட்டுப்பாளையத்திலிருந்து சுமார் 20 மைல்களுக்கு அப்பாலுள்ள பவானி சாகரில் ஏற்படுத்தலாமெனக்கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் காகிதத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆராய்வதற்கு வந்திருக்கும் இரு ஜெர்மன் நிபுணர்களும், காகிதத் தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் நீலகிரி மாவட்டத்தில் ஏராளமாக இருப்பதாகக் கருத்தறிவித்துள்ளனர்.

'150 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ 6 கோடி செலவில் தொழிற்சாலை அமைக்கப்படும்; நாள் தோறும் 100 டன் பத்திரிகைக் காகிதமும், 30 டன் 'பாக்கிங்' காகிதமும் தயாரிக்கப்படும்; காகிதம் தவிர 'யூக்காலிப்டஸ்' எண்ணெயும் அத் தொழிற்சாலையில் தயாரிக்க முடியும்' என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

'அரசாங்கம் தலையிடாது'

போதன மொழிப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் நிலை

புதுடில்லி, நவ. 25—

"பல்கலைக் கழக போதன மொழிப் பிரச்சினையை ஒரு கொள்கைப் பிரச்சினையாக்கிக் கொள்ளும் நோக்கம் மத்திய சர்க்காருக்குக் கிடையாது; போதனமொழியைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகங்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்பதே இந்திய சர்க்காரின் நோக்கமாகும்; இப்பிரச்சினையில் குறுக்கிடும் நோக்கமே சர்க்காருக்குக் கிடையாது,"

என்று, மக்கள் சபையில், பல்கலைக் கழக மானியக் குழு மசோதாமீது நடைபெற்ற விவாதத்திற்குக் கல்வி அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளர் குறிப்பிட்டார்.

★

அடுத்த ஆண்டிலும் சாத்தியமில்லையாம்!

கல்லூரிகளில் தமிழைப் போதன மொழியாக்குவது பற்றி அமைச்சர்

சென்னை, நவ 25—

"கல்லூரிகளில் தமிழைப் போதன மொழியாக்குவதற்கு திட்டமெதுவும் தற்போது கிடையாது; அடுத்த ஆண்டிலும் அது, சாத்தியமாகுமென்று தோன்றவில்லை; இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு, இது எப்போது சாத்தியமாகுமென்பதைச் சிபாரிசு செய்யும்."

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சென்னை சட்ட சபையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

கே:- 'கேரள, கர்நாடக மாநிலங்கள் பிரிந்தவுடன், தமிழ் ஆட்சி மொழியாக்கப்படுமா?'

அமைச்சர்:- 'சரியான சமயத்தில் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.'

கே:- 'திருச்சி மாவட்டத்தில் தமிழில் நிர்வாகம் நடத்தப்படுகிறது; ஆனால், தமிழே தெரியாத அதிகாரிகள் இருக்கிறார்களே!'

அமைச்சர்:- 'அதனால்தான் அங்கு தமிழில் நிர்வாகம் நடத்தும் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை; தமிழ் தெரிந்த அதிகாரிகளையே நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?'

கடலூர் தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

30—11—55 மாலை 5 மணிக்கு கடலூர் நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், கடலூர் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

மாநில மாநாட்டு நிதிக்காக

★

10-12-55 மாலை 6 மணிக்கு, சென்னை, கோகலே மண்டபத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் இன்னிசை விருந்தளிப்பார்.

ரூ. 2 நன்கொடைச் சீட்டுகள் கீழ்க்காணும் இடங்களில் கிடைக்கும்:—

'அறிவகம்', இராயபுரம்.

ஜி. பெருமாள், 4, நமசிவாய முதலி தெரு, பைக்கிராட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

ந. செயராமன், 30, கிடங்கு தெரு, கொத்தவால்சாவடி.

ந. வேதாச்சலம், 40, முத்தியால் நாய்க்கன் தெரு, புரசைவாக்கம்.

—சென்னை மாவட்ட தி.மு.க.

தமிழ் நாட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியசாலை, பிளவர்ஸ் சாலை, மாதவாக்கம் சாலை வழியாக புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் பெரம்பூரில் உள்ள இரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலைக்குச் செல்கின்றனர்.

இந்தச் சாலைகளில் எல்லாம், இடைவிடாது தோரணங்களும், கொடிகளும், வரவேற்பு வளைவுகளும் அமோகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

சர்க்கார் அலுவலகங்கள், வர்த்தக தொழில் நிலையங்கள், பெரும் மாளிகைகள் இங்கெல்லாம், ரஷ்யத் தலைவர்களுக்கு வாழ்த்தும், வரவேற்பும் கூறும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட 'பானர்'களும், தட்டிகளும், திரைச் சீலைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

பெரம்பூர் தொழிற்சாலையைப் பார்வையிட்ட பின்பு, நகரசபை ஸ்டேடியத்தில் நடைபெறும் குழந்தைகள் வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் சோவியத் தலைவர்கள் பங்கு பெறுவர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து, ஐலண்ட் மைதானத்தில் நகரசபை தரும் வரவேற்பைப் பெற்றுக் கொள்ளுவர்.

இரவு கவர்னர் மாளிகை விருந்துக்குப் பின், இன்னிசை, நடனம் ஆகியவை கேட்டு, கண்டுகளிப்பர்.

நாளைய தினம் காலை 9 மணிக்கு கல்கத்தாவிற்கு விமான மூலம் செல்லுவார்கள்.

முன்னைய நிகழ்ச்சிப்படி, திராவிட சிற்பக் கலைத்திறன் சிறக்கும் மகாபலிபுரத்திற்கு சோவியத் தலைவர்கள் செல்வர் என்று இருந்தது; ஆனால், அந்த நிகழ்ச்சி இப்போது நீக்கப்பட்டுவிட்டிருக்கிறது.

கழனியிலிறங்கிக் கதிரறுத்தார்!

குருஷ்சேவ் கற்பிக்கும் பாடம்?

சோவியத் ரஷ்யப் பிரதமர் புல்கானினும், கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் குருஷ்சேவும், பூனுவுக்கு சுமார் 25 கல் தொலைவில் உள்ள வடகான் நெற் பயிர்ப் பண்ணைகளுக்குச் சென்றபோது, அங்குள்ள வயல்களில் சில தொழிலாளிகள் அறுவடை செய்து கொண்டிருந்த இடத்திற்கு குருஷ்சேவ் சென்று, அறுவடை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் கையிலிருந்த அரிவாளை வாங்கி பயிர் அறுவடை செய்தாராம்!

சிறிது நேரம் அவ்வேலையைச் செய்ததும், மறுபடியும் அந்த அரிவாளை அத்தொழிலாளியிடம் கொடுத்துவிட்டு, 'நாம் எல்லோரும் சேர்ந்து வேலை செய்வோமா?' என்று கேட்டாராம்!

அந்த நிலத்தில் ஓரிடத்தில் குருஷ்சேவும், மற்றோரிடத்தில் புல்கானினும் மாங்கன்றுச் செடியை நட்டனர்; மண்ணைத் தள்ளியதும், கைகளைக் கழுவிக் கொள்வதற்காக குருஷ்சேவுக்கு சோப்பும், தண்ணீரும் கொண்டு வரப்பட்டதாம். உடனே அவர் கைகழுவ மறுத்துவிட்டு, "கைகளைக் கழுவும் வேலையைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; முதலில், நட்டுவிட்ட செடிக்குத் தண்ணீரை ஊற்றுவோம்; நாம் இந்த வேலையில் தாமதம் செய்தால், நம்மிடையே நடைபெற்றுவரும் இந்த 'சமாதானப் போட்டி'யைக் கண்டு புல்கானின் அடிக்க வருவார்" என்று கூறினாராம்!

ஒரு குவளை தண்ணீரை ஊற்றிவிட்டு, மறுபடியும் மற்றொரு குவளை தண்ணீர் தருமாறு கேட்டுவிட்டு, 'இந்தச் செடி வேகமாக வளருவதற்கு இன்னும் அதிகத் தண்ணீர் தேவைபோல் தெரிகிறது' என்று கூறினாராம்.

குறிப்பிட்ட நேரத்தில் தங்களது நிகழ்ச்சிகளை முடித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அவருடன் இருந்த அதிகாரிகள், அவரைத் தமது கைகளைக் கழுவிக் கொள்ளச் செய்வதில் துரிதப் படுத்தினர்.

உடனே பக்கத்திலிருந்த மற்ற ஒரு ரஷ்ய அதிகாரி, அவரைத் துரிதப்படுத்தும் முயற்சியைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டு, 'குருஷ்சேவ், விவசாய வேலைகள் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது, அவரை, வேறு கவனங்களில் திருப்பிவிட எவராலும் முடியாது,' என்று தெரிவித்தாராம்!

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் தீ விபத்து

நெல்லிக்குப்பம், நவ. 21—

இன்று காலை 10 மணியளவில், பாய்லருக்காக அடுக்கிவைக்கப்பட்டிருந்த கருப்பஞ் சக்கை கட்டுகள் தீப்பிடித்துக் கொண்டன. கடலூரிலிருந்தும், விழுப்புரத்திலிருந்தும் தீயணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டனர். தீ விபத்தின் காரணமாக ரூ. 10,000 மேற்பட்ட பொருட்சேதம் ஏற்பட்டிருக்கலாம்.

காஷ்மீரின் எதிர்காலம்

கராச்சி மாநாட்டில் பலவகை கருத்துக்கள்

கராச்சி, நவ. 27—

"செஞ்சட்டைத் தலைவர் கான் அப்துல் கபார் கானும், அவரது சகோதரரான மேற்கு பாகிஸ்தான் முதலமைச்சர் டாக்டர் கான் சாகிபுமாகச் சேர்ந்து இந்தியா சென்று, காஷ்மீர் தகராறு குறித்து ஒரு தீர்மான முடிவுக்கு உடன்பாடு செய்துவர வேண்டும்"

என்று, இங்கு நடைபெற்று வருகிற 'அகில கட்சி காஷ்மீர் மாநாட்டில்' கேட்டுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

மாநாடு, இன்னும் விவாத நிலையிலேயேதான் இருக்கிறது என்றும், இப்பிரச்சினை குறித்துப் பல கருத்துக்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

இந்தியா காஷ்மீருக்கு வழங்கினதைப் போன்றே, பாகிஸ்தானும் தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களில் முழுச் சுதந்திரத்தையும் ஆசாத் காஷ்மீருக்குத் தர வேண்டும் என்றும் மாநாட்டில் கோரப் பட்டிருக்கிறது.

"காஷ்மீர் பிரச்சினையில் சமாதான உடன்பாடுகள் காணுவதற்கு ஒரே ஒரு வழி யுத்தம்தான்; யுத்தத்தின்மூலம் மட்டும்தான் இந்தத் தகராறை தீர்க்க முடியும்" என்று, மாநாட்டின்போது ஒருவர் கூறியிருக்கிறார்.

மாநாட்டில் வேறொருவர், பாகிஸ்தானுக்குக் கிடைத்துவரும் அமெரிக்க இராணுவ உதவி குறித்து மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார் என்றும் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது

உயர்த்த இயலாதென அமைச்சர் அறிவிப்பு

ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று கல்வி மந்திரி சுப்பிரமணியம் மேல் சட்ட சபையில் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் 55 வயதில் ஓய்வு பெற்றாலும் பெரும்பாலும் அவர்களுக்கு தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளில் மீண்டும் வேலை கிடைக்கிறதென்றும், எனவே அவர்களது அனுபவம் பயன்படாமல் போகும் என்ற நிலைமை ஏற்படவில்லை என்றும், மேலும் கல்லூரிகளிலிருந்து வெளிவந்து கொண்டேயிருக்கும் இளைஞர்களுக்கு மேலும் மேலும் வேலை அளிக்கும் பிரச்சினை வேறு இருக்கிறதென்றும் மந்திரி கூறினார்.

"முடிவு செய்வதாயின் ஆசிரியர்கள் விஷயத்தில் மட்டுமின்றி தல தாபனங்கள், சர்க்கார் சிப்பந்திகள் அனைவரது விஷயமாகவுமே முடிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆசிரியர்களை மட்டும் நாம் விசேடமாக நடத்த முடியாது. இது தான் பிரச்சினையிலுள்ள கஷ்டம்" என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போது ஏராளமான இளைஞர்கள் பயிற்சிக் கல்லூரிகளுக்கு மனுச் செய்கின்றனர் என்றும், எனவே, தற்போது உபாத்திமைத் தொழில் 'கவர்ச்சியற்றது' என்று சொல்ல முடியாதென்றும் அவர் கூறினார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம்

★

18—12—55-ல்

குடந்தையில் நடைபெறும்

★

இடம் — நேரம் பிறகு அறிவிக்கப்படும்

'அறிவகம்' 25-11-55. } —தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.